**செய்தி வெளியீடு எண்: 292** **நாள்: 16.05.2012**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (16.5.2012) தலைமைச் செயலகத்தில், சத்தீஸ்கர் மாநிலம், சுக்மா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அலெக்ஸ் பால் மேனன், இ.ஆ.ப. அவர்கள் சந்தித்து, மாவோயிஸ்ட்டுகளால் கடத்தப்பட்ட தன்னை மீட்பதற்கு மத்திய அரசை வலியுறுத்தியமைக்காக நன்றி தெரிவித்தார்.

சத்தீஸ்கர் மாநிலம், சுக்மா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அலெக்ஸ் பால் மேனன், இ.ஆ.ப. அவர்கள் கடந்த 21.4.2012 அன்று பணியில் ஈடுபட்டிருந்தபோது மாவோயிஸ்டுகளால் கடத்தப்பட்டார். மாவோயிஸ்டுகளால் கடத்தப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த திரு. அலெக்ஸ் பால் மேனன் அவர்களை மீட்பதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 23.4.2012 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள்.

சுக்மா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அலெக்ஸ் பால் மேனன் அவர்களை மாவோயிஸ்டுகள் 3.5.2012 அன்று விடுவித்தார்கள். மாவோயிஸ்ட்டுகளால் கடத்தப்பட்ட தன்னை மீட்பதற்கு பாடுபட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று தலைமைச் செயலகத்தில், திரு. அலெக்ஸ் பால் மேனன், இ.ஆ.ப. அவர்கள் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 16.5.2012